பதிவு எண்: M. 6811 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 26 (11—11—72) சனி வெளியீடு: ஐப்பசி 27 (12—11—72) ஞாயிறு [இதழ்: 123

குட்டை உடைக்கி[றார்]

இடது கம்யூனிஸ்டு ஏ. கே. கோபாலன்

"இப்போது இலஞ்ச ஊழலை எதிர்த்து மட்டும் வலதுசாரிக் கம்யூனிஸ்டுகள் செயல்படவில்லை; காங்கிரசுக்கும் -- எம். ஜி. ஆர் கட்சிக்குமிடையே உறவை ... படுத்தவே முயலுகிறார்கள் ... கூட்டில் ஒரு 'பங்கு' பெறவும் அவர்கள் விரும்புகிறார்கள்; அடுத்த தேர்தலே 'அவர்கள்' நோக்கம்."

மணிவிழா காணும் என். வி. என். வாழ்க!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளரும் -- தமிழகத் தொழிலாளர் நலத் துறை அமைச்சருமான மாண்புமிகு என். வி. நடராசன் அவர்களுக்கு இன்றுடன் அகவை அறுபது முடிந்து நாளை அறுபத்தோராவது அகவை பிறக்கிறது.

அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா, நாளை சென்னையில் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது,

அண்ணா சாலையிலுள்ள தி. மு. க. அறக்கட்டளை--அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவுக்குத் தந்தை பெரியார் தலைமை வகிக்கிறார்; கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மணிவிழாக் கேடயம் வழங்குகிறார்; பொதுச்செயலாளர் டாக்டர் நாவலர் பொன்னாடை போர்த்துகிறார்; நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மணிவிழா மலரை வெளியிடுகிறார்; அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வாழ்த்திதழ் வழங்குகிறார்; சிலம்புச் செல்வர் ம. பொ. சி, தவத்திரு குன்றக்குடி அடிகளார், அப்துல்வஹாப், ஏ. ஆர். பெருமாள், கவிஞர் கண்ணதாசன், எஸ். எஸ். இராமசாமிபடையாச்சி ஆகிய தோழமைக் கட்சித் தலைவர்களும் அமைச்சர் பெருமக்கள் -- மாவட்டச் செயலாளர்கள் -- நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் -- ஏனைய கழக முன்னணித் தோழர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவிருக்கின்றனர்.

காங்கிரசுக் கட்சியில் செயல்வீரராகத் திகழ்ந்த திரு. என். வி. நடராசன் அவர்கள், 1938-ல் நடந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போது பேரறிஞர் அண்ணாவால் கவரப்பட்டு, தந்தை பெரியாரின் பேரணியில் வந்து சேர்ந்தவர் ஆவார்.

தாய்மொழிப் பற்றின் காரணமாகக் கட்டாய இந்தியை எதிர்த்துத் தாம் சார்ந்திருந்த பேரியக்கமாம் காங்கிரசுக் கட்சியையே உதறித் தள்ளிவிட்டுத் திராவிட இயக்கத் தந்தை பெரியாரின் தொண்டரானார்; பேரறிஞர் அண்ணாவின் பேரன்புக்குரிய தோழரானார்.

நீதிக் கட்சியின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் ஆன என். வி. என். அவர்கள், திராவிடர் கழகத்தில் பெரியாரின் 'முன்னேறும் பிள்ளை' என்று சொல்லத்தக்க வகையில் அருமபணியாற்றினர்.

சென்னை மாவட்ட திராவிடர் கழகத் தலைவராகவும் இருந்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்க உறுதுணையாக இருந்த முக்கியத் தோழர்களில் என்.வி.என். அவர்களும் ஒருவர் ஆவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் அண்ணா உட்பட ஐம்பெரும் தலைவர்களில ஒருவராகப் போற்றப்பட்டு -- துணைப் பொதுச் செயலாளராகவும் பொறுப்பேற்று -- நீண்டகாலம் பணியாற்றி வந்திருக்கிறார்.

என்.வி.என். அவர்கள் கழக முன்னணிப் பேச்சாளராகவும், 'திராவிடன்' வார இதழ் ஆசிரியராகவும் இருந்து--கழகக் கொள்கைகளைப் பட்டிதொட்டிகளிலெல்லாம் பரவச் செய்திருக்கிறார்.

கழகம் நடத்திய ஒவ்வொரு போராட்டத்திலும் என். வி. என். அவர்கள் ஏற்ற பங்கு சிறப்பானது; பலமுறை சிறை சென்று அடக்குமுறைக் கொடுமைகளை ஏற்றிருக்கிறார்!

கழகத் துவக்கக் காலத்தில் என். வி. என். அவர்கள் குன்றத்தூரில் பேச இருந்தகூட்டம்

தடைசெய்யப்பட்டது; தடைமீறி இவர் பேசச் சென்றபோது அங்கு துப்பாக்கிப் பிரயோகமே நடைபெறக்கூடிய அளவுக்கு நிலைமை முற்றியது; போலீசாரால் என். வி. என். கைது செய்யப்பட்டார்; இது கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

கழகத்தில் தலைவர்களோடு தலைவராகவும் -- தொண்டர்களோடு தொண்டராகவும் பழகும் என். வி. என். அவர்கள், எல்லோருக்கும் நல்லவராகவும், காட்சிக்கு எளியவராய் -- கடுஞ்சொல் அல்லராய்த் திகழும் இயல்பினர் ஆவார்!

என். வி. என். அவர்கள் தமது குடும்பத்தையே கழகப்பணிக்கு அர்ப்பணித்துவிட்டார்; 1938 இந்தி எதிர்ப்பின்போது, தமது துணைவியார் திருமதி புவனேஸ்வரி அம்மையாருடன் இவர் சிறை சென்றபோது, இன்றைய துணை மேயரான என்.வி.என். சோமு, கைக்குழந்தையாகச் சிறையிலே தாயாருடன் வாடினார்!

சோமுவுக்கு இளையவரான என். வி. என். செல்வமும் தி. மா. மு. கழகத்தில் துடிப்புள்ள செயல் வீரராகத் திகழ்வது அனைவரும் அறிந்த செய்தியாகும்.

காங்கிரசில் இருந்த காலத்திலேயே தொழிலாளர்களுடன் தோளோடு தோள் நின்று -- தொழிற்சங்க இயக்கங்களில் பாடுபட்டவரும், தொழிலாளர் தலைவர் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் தலைமையில் பணியாற்றியவருமான என். வி. என். அவர்கள், இப்போது தமிழ்நாட்டின் தொழிலாளர் நலத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுச் சிறப்பான பணிகளைச் செய்துவருவது தமிழ்நாட்டுக்கே பெருமையளிப்பதாகும்.

நாளை மணிவிழா காணும் மாண்புமிகு என். வி. என். அவர்கட்கு 'நம் நாடு'ம் -- அதன் அலுவலக ஊழியர்களும் தங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

வாழ்க -- என். வி. என். பல்லாண்டு
வளர்க -- அவர்தம் நற்றொண்டு!

இதைச் சொல்லுபவர்கள் யார்?

"யாருடையது அடுத்த ஆட்சி என்பது பிரச்சினை இல்லை; ஆட்சி[யிலிரு]ந்து இறங்கவேண்டும்; அடுத்த ஆட்சி யாருடையது என்பதை மக்கள் தீர்ப்பு அளிப்பார்கள்."

—காம்ரேடு கல்யாணசுந்தரம்
'நவமணி' ! 10—11—72

அடுத்த ஆட்சி யாருடையது என்று தீர்ப்புக் கூறவேண்டியவர்கள் மக்கள்!

இந்த ஆட்சி இறங்கவேண்டும் என்று தீர்ப்புக் கூறவேண்டியவர்கள் யார் -- கல்யாணசுந்தரமும் புரட்சி நடிகரும் தானா? மக்கள் முடிவுசொல்ல வேண்டாமா? கல்யாணசுந்தரமும் -- புரட்சி நடிகரும் மட்டுமே அல்லரே மக்கள்!

துக்ளக் தர்பார்!

"அர்த்தால் அன்று மக்கள் வெளியே வரக்கூடாது; வீட்டிலேயே இருக்கவேண்டும்."

—புதுக் கட்சி மூலவர்

வீட்டைவிட்டு வெளியே வந்தால்......உமது ஆட்கள் கவனித்துக் கொள்வார்களா? என்னய்யா--கடுமையான உத்தரவாக இருக்கிறது?

அசாம் மாநிலத்தில்தான் கலகம் நடக்கிறது; அந்த அரசு ஊரடங்கு உத்தரவைப் போடுகிறது!

இங்கு உமது ஆட்கள் கலகம் செய்வார்கள் என்பதற்காக நாங்கள் வீட்டில் அடங்கி இருக்க வேண்டுமோ?

ஒரு கட்சித் தலைவராக மனம் குட்டிக் கொண்டவுடனேயே நாளுக்கு ஒரு உத்தரவு -- வேளைக்கு ஒரு கட்டளை போட்டு துக்ளக் தர்பார் நடத்துகிறீரே -- நீர் இந்த மாநிலத்தின் முதலமைச்சராகவே வந்துவிட்டால் என்னென்ன நடக்குமோ?

உண்மை வெளியாகிறது

காம்ரேடுகளை கவர்ந்த 'கவர்ச்சி'

கம்யூனிஸ்டுக் கட்சியினர் கூடி நடத்திய மகத்தான ஆராய்ச்சி

"எம்.ஜி.ஆர். படங்களை நான் பார்த்தது இல்லை; ஒரே ஒரு படம் -- 'அடிமைப் பெண்' படத்தைப் பார்க்க வற்புறுத்தி அழைத்தார்கள் -- பார்த்தேன்.

"இவருக்குப் பெண்கள் கூட்டம் ஏராளமாக வருகிறதே ஏன் -- என்று எங்கள் கட்சியில் ஆராய்ச்சி செய்தோம்; 'நடிப்பில் சிறந்தவர்' என்றால், அவரைவிடச் சிறந்தவர்கள் இருக்கலாம்; எம்.ஜி.ஆரின் பேச்சு, கருத்து -- கவர்ச்சி; பெண்கள்--ஆண்கள் கூட்டமாக வருகிறார்கள்."

—கல்யாணசுந்தரம்
'நவமணி': 10—11—'72

ஐயோ பாவம்! அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள்--தத்துவங்களையெல்லாம் ஆராய்ந்து நாட்டுக்குச் சொல்லிக்கொண்டிருந்த கம்யூனிஸ்டுக் கட்சிக்கு, 'ஒரு நடிகருக்குப் பெண்கள் கூட்டம் அதிகமாக வருவது ஏன்?' என்பது பற்றி ஆராயும் நிலை வந்துவிட்டிருக்கிறது!

இந்த நடிகரின் பேச்சில் -- கருத்தில் -- கவர்ச்சியில் -- சண்டப்பிரசண்டரான காம்ரேடு கல்யாணசுந்தரமே மனத்தைப் பறிகொடுத்திருக்கிறார் என்றால், கேட்கவா வேண்டும்?

அதிருக்கட்டும்; இந்த ஆராய்ச்சி எப்போது நடந்தது உங்கள் கட்சியில்? தி.மு.க. மீது புரட்சி நடிகர் குற்றஞ்சாட்ட ஆரம்பித்த பின்னரா -- முன்னரா?

அதற்கு முன்பே ஆராய்ந்துவிட்டீர்கள் என்றால், அப்போதே அந்த ஆராய்ச்சியின் முடிவை வெளியிட்டிருக்கலாம் அல்லவா?

இவ்வளவு பெரிய ஆராய்ச்சி முடிவை -- அரிய உண்மையை இவ்வளவு நாள் எப்படித்தான் வெளியிடாமல் வைத்திருந்தீர்களோ!

"இராமபுரத்தில் அந்த நடிகருடன் சேர்ந்து ஒரே மேடையில் பேசப்போகிறோம் -- அப்போது வெளியிடலாம்" என்று காத்திருந்தீர் போலும்!

ஆனால், இதில் ஓர் உண்மையையும் ஒளிக்காமல் மறைக்காமல் வெளியிட்டதற்காக உம்மைப் பாராட்டலாம்.

'எம்.ஜி.ஆரைவிடச் சிறந்த நடிகர் இருக்கிறார்கள்' என்றதன் மூலம் இவர், 'நடிப்பில் சிறந்தவர் அல்லர்' என்று பொடி வைத்துப் பேசிவிட்டீரே!

சபாஷ் காம்ரேட்! இனி புரட்சி நடிகரின் புதும் படம் வருகிறது என்றால், உங்களுக்குத்தான் முதல் காட்சியிலே முன் வரிசையில் இடம்! அட்வான்சு புக்கிங் கவுண்டரில் உங்கள் காம்ரேடுகளின் 'கியூ'தான்! நடக்கட்டும் உங்கள் 'அரசியல்' -- நிலைக்கட்டும் உங்கள் நட்புறவு!

தமிழக முதலமைச்சர்-- பிரிட்டிஷ் அமைச்சர் சந்திப்பு

சென்னை, நவ. 11—

அயல்நாடுகள் மேம்பாட்டுப் பணி பொறுப்பை ஏற்றுள்ள பிரிட்டிஷ் அமைச்சர் திரு. ரிச்சர்டு வுட், இன்று சென்னை வருகிறார்; இன்று மாலையே அவர் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்திப்பார்.

நவ. 13-ம் நாளன்று அடையாற்றில் உள்ள தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்குச் சென்று பார்க்கிறார்; அன்று மாலை அவர், திரு. இராசகோபாலாச்சாரியாரை அவரது இல்லத்தில் சந்திப்பார்; (இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த இர்வின் பிரபுவின் மகன் ரிச்சர்டு வுட்).

நவ. 14-ம் நாள் காலையில் அசோக் லேலண்டு மற்றும் எண்ணூர் பவுண்டரி தொழிற்சாலைகளைச் சென்று பார்க்கிறார்; நண்பகலில் கவர்னரைச் சந்திக்கிறார்; கவர்னர் பிரிட்டிஷ் அமைச்சருக்கு பகல் விருந்து அளிக்கிறார்.

சொன்னதும் நடந்ததும்

"பத்தாம் தேதி ஊர்வலத்தில் கல்யாணசுந்தரமும் -- எம். ஜி. ஆரும் -- மற்றத் தலைவர்களும் நடந்தே வருவார்கள்."

—பத்திரிகைச் செய்தி: 9—11—72

"எம். ஜி. ஆர். ஒரு மோட்டார் வானில் நின்றபடி வந்தார்!"

—பத்திரிகைச் செய்தி ! 10—11—72

'கட்சி ஆதரவு கொடுக்கும்' என்கிறார் மத்திய அமைச்சர்

"தி. மு. க. போக்கைக் கண்டித்து எம். ஜி. ஆர். நடத்தும் கிளர்ச்சிக்கு நாங்கள் கட்சி ரீதியில் ஆதரவு கொடுப்போம்."

--மோகன் குமாரமங்கலம் (திருவத்திபுரம் பேச்சு)

'ஒதுங்கி இருக்க வேண்டும்' என்கிறார் கட்சியின் செயலாளர்

திருச்சி, நவ. 7—

"கருணாநிதி—எம். ஜி. ஆர். தகராறில் காங்கிரசுக்காரர்கள் அவசரப்பட்டுத் தங்களுடைய கருத்துக்களை வெளியிடக் கூடாது; காங்கிரசுக்காரர்கள் பொறுத்துப் பார்க்க வேண்டும்.

"மத்தியில் கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சி பொறுப்பில் இல்லை. ஆகவே, இந்தத் தகராறில் அவர்கள் தீவிரப் பங்கு எடுத்துக் கொள்கிறார்கள்; ஆனால் மத்தியில் ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரசுக் கட்சிக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது.

"ஆகவே இப்போதைய சச்சரவிலிருந்து காங்கிரசுக்காரர்கள் ஒதுங்கி நிற்கவேண்டும்."

---மரகதம் சந்திரசேகரன் (இந்திரா காங்கிரசுக் கட்சிச் செயலாளர்)

தார்மீக ஆதரவின் இகரசியம்

என்ன?

புரட்சியார் கட்சியும்—கல்யாண சுந்தரத்தின் கம்யூனிஸ்டுக் கட்சியும் நடத்தவிருக்கும் அர்த்தாலுக்குத் தமது கட்சியின் தார்மீக ஆதரவு உண்டு -- என்று தமிழ்நாட்டு இந்திரா காங்கிரசுத் தலைவர் ஏ. பி. சி. வீரபாகு அறிவித்திருக்கிறார்.

புரட்சி நடிகரின் புதுக்கட்சியைப் பற்றி இந்திராகட்சியின் மேலிடத்திலிருந்து வந்த கட்சிச் செயலாளர் திருமதி மரகதம் சந்திரசேகரன், 'அவசரப்படேல் -- பொறுத்திருந்து பார்ப்போம்' என்று கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்!

தமிழ்நாட்டு இந்திரா கட்சித் தலைவரோ, தார்மீக ஆதரவு தர முடிவு செய்து--அதுமற்றி அறிவித்தும் விட்டார்!

கட்சித் தலைமையை மீறித்தான் இது நடைபெறுகிறதா அல்லது கட்சித் தலைமையின் இரகசிய உத்தரவுப்படிதான் வீரபாகு நடக்கிறாரா?

இந்திரா கட்சி மேலிடத்துத் தலைவர்கள் வெளியில் பேசுவது ஒன்றாகவும் -- கட்சிக்குள் கட்டளையிடுவது வேறாகவும் உள்ளது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது!

தாராளமாக 'தார்மீகஆதரவை' வழங்கட்டும் -- தார்மீக ஆதரவைத் தவிர வேறு எதை அவர்கள் தரமுடியும்--தொண்டர்களையா அனுப்பி வைக்க முடியும்?

தமிழ்நாட்டில் இந்திரா கட்சிக்கு உள்ள தலைவர்கள் -- தொண்டர்கள் எல்லாம், வீரபாகுவும் -- அவரைச் சேர்ந்த ஒன்றரை டஜன் பேர்களும்தானே!

ஆசிரியருக்கு மடல்

சில பத்திரிகைகளின் சிண்டு முடியும் வேலை

நான் தி. மு. கழகத்திலிருந்து விலகி எம். ஜி. ஆர். கட்சியில் சேருவேனா என்ற கேள்விக் குறியை எழுப்பி 'தினமலர்' இதழில் 27—10—72 அன்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது; இது எனக்கு வேடிக்கையாகவும், வேதனையாகவும் உள்ளது. செய்திகளை எப்படி வேண்டுமானாலும் வெளியிடலாம் என்ற [illegible] சில பத்திரிகைகள் [illegible] கடைப்பிடிக்கின்றன; இந்தச் செய்தி அறிக்கையிலிருந்து தொடுக்கப்பட்டுள்ளது; அதன் அடிப்படையை நிருபர்தான் இதைக் கொடுத்திருக்க வேண்டும். இந்திரா காங்கிரசுக் கட்சியின் செயலாளரான அந்த நிருபர், உண்மைக்குப் புறம்பான வதந்திகளைச் செய்தியாக்கி எங்களுடைய பழைய நண்பர்களுக்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கை எடுக்கிறார் போலும்!

நான் என்னுடைய 14-வது வயதில் மாணவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலம் அண்ணாவின் தலைமையில் அர்ப்பணித்துக் கொண்டவன். 36 வயதான நான், இதுவரையில் வட்டச் செயலாளர் போன்ற பல பொறுப்புகளிலிருந்து இயக்கப் பணியாற்றி சட்டமன்ற உறுப்பினரானவன். கழகம் கல்லும் -- முள்ளும் நிறைந்த பாதையில் அடியோட்டபோதே அதில் நான் என்னை ஈடுபடுத்திக்கொண்டவனே தவிர, தார் ஆறு போட்ட பின்னுள்ள காரோட்டி வந்த சிலரைப் போல நான் வந்தவனல்லன்.

அறந்தாங்கி வட்டக் கழகத்தில் இதற்கு முன்பும் பல பிரச்சினைகள் தோன்றித் தலைமை கழகத்திற்கும் தீர்வு காணப்பட்டுள்ளது; தலைமைக் கழகத்தின் தீர்ப்பு எதுவானாலும், இதுவரை ஏற்றுப் பணியாற்றி வந்துள்ளேன். இப்பொழுது, அறந்தாங்கி வட்டத்தில் தோன்றியுள்ள தகராறு குறித்துத் தலைமைக் கழகம் தரும் தீர்ப்பை நானும்--என்னைச் சார்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்; இதற்கிடையில் இதுபோன்ற தவறான செய்திகளைத் தருவதும் -- சிண்டு முடியும் வேலையில் ஈடுபடுவதும் -- நாணயமுள்ள பத்திரிகைகளுக்குத் தகுதியல்ல!

நான் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் பணியாற்றியவன்; கலைஞர் தலைமையில் பணியாற்றிக்கொண்டிருப்பவன்; புரட்சி நடிகர் எத்தகைய அரசியல்வாதி என்பதை இயக்கத்தில் அவர் பணியை ஊன்றிக் கவனிப்பவன். எனக்கு ஏற்படுகின்ற வேதனை யெல்லாம், 'தமிழகத்தின் அரசியல் தலைவிதி, புரட்சி நடிகர் போன்றவர்கள் எல்லாம் அரசியலில் ஒரு புதிய கட்சியைத் துவக்கக் கூடிய அளவிற்குச் சென்று விட்டதே' என்பதுதான்.

தமிழகத்திற்கென ஒரு நல்ல அரசியல் பாரம்பரியம் உண்டு; அதை நான் உணர்வேன்; கலைஞருடைய தலைமையைத் தவிர வேறு நாதி இன்று தமிழகத்திற்கு இல்லை. சமய சிந்தம் கொண்டவர்களும் -- சமூக ஆட்சியின் மூலம் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்காததால் வில்லை என அசைப்பட்டவர்களும் இன்றைக்குத் தினம் புரட்சி நடிகரைப் பின்பற்றுகிறார்கள்; அவர் பின்பற்றுபவர்கள் எத்தகைய நாணயம் உடையவர்கள் என்றும் எனக்குப் புரியும். அவர்களுக்கு இன்றைய நிலையில் உள்ள ரசிகர்கள் ஆதரவு எங்கே கொண்டு போய்விடும் என்பதும் எனக்குப் புரியும்.

என்னைப்போல் இயக்கப் பிடிப்புள்ளவர்களை சந்திக்கு இழுக்கக் கூடாது; இப்பொழுது சந்தியில் நின்று சிந்து பாடும் அந்த அப்பாவிகளையே சில பத்திரிகைகள் இன்னும் சில மாதங்களுக்குத் தலையில் வைத்துக் கூத்தாடட்டும்; தமிழகத்தின் வாழ்வும்—தமிழின் உயர்வும் தமிழ் சமுதாய மக்களின் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படவேண்டுமானால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தால் தான் முடியும்—கலைஞரால்தான் முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் நான்.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியே கவிழ்க்கப்பட்டு அது ஒரு சின்னஞ் சிறிய இயக்கமாகி அரசியல் பணியாற்றும் நிலை ஏற்பட்டாலும் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றுபவன்தான் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கயிறு திரிக்கும் வேலையையும்--சிண்டு முடியும் வேலையையும் -- நல்லவர்களைச் சந்திக்கு இழுக்கும் வேலையையும் செய்து வீணான புரளியை உருவாக்கித் தமிழகத்தில் ஒரு நல்ல அமைதியான ஆட்சியைக் கெடுக்கும் பணியை இனிமேல் இதுபோன்ற பத்திரிகைகள் செய்ய வேண்டாம் -- பத்திரிகை தர்மத்தைக் கெடுக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இராமநாதன் எம்.எல்.ஏ.
அறந்தாங்கி

வள்ளல் -- அண்ணா வழி நடப்பவர் -- அண்ணா பெயரில் அமைப்பு ஏற்படுத்தியிருப்பவர்! போதாதற்கு, கொடியிலும் அண்ணாவின் உருவத்தைப் பொறித்திருக்கிறார்!

அவரை நாம் புரட்சி நடிகர் -- நடிகப் பேரரசு -- மக்கள் திலகம் -- என்றெல்லாம் அன்புப் பெயரிட்டு அழைத்து வந்தோம்; இதற்குக் கைமாறாக நம் இயக்கத்திற்கு --கழகத் தோழர்களுக்கு அவர் செய்துள்ள நன்றிக் கடன் என்ன தெரியுமா -- எட்டப்பன் வேலை தான்!

நம் உழைப்பிலேயும் உணர்ச்சியிலேயும் வளர்ந்தவர் -- நம்மால் வளர்த்து விடப்பட்டவர், வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததுபோல் மத்திய ஆட்சியாளருக்கு நம்மைக் காட்டிக் கொடுக்க முனைந்திருக்கிறார்!

நன்றி மறந்தவர்களுக்கும் -- காட்டிக் கொடுத்தவர்களுக்கும் மக்கள் மன்றத்தில் என்றுமே மன்னிப்புக் கிடையாது! அந்த ஒட்டுக் காங்கிரசுத் தலைவரின் முன்னைய பேச்சு -- இடையில் பேசிய பேச்சு -- தற்போது பேசிவரும் பேச்சு அத்தனையையும் பார்த்தால் முன்னுக்குப்பின் முரணான அவரது கூற்றுக்கள் பற்றிப் பொதுமக்கள் நிச்சயம் சிந்தித்தே தீருவர்!

தி. மு. கழகம் சாதாரணமானதல்ல; பல உயிர்களைத் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகக் கொடுத்தும் -- சிறைச்சாலைக் கொடுமைகளைத் தாங்கியும் -- கல்லடிக்கும் சொல்லடிக்கும் ஆட்பட்டும் தியாகத்தாலும் போற்றி வளர்த்த கழகம்; அதை எந்தச் சக்தியும் சதி செய்து ஒழித்துவிடலாம் என்று கருதினால், அதற்கு மக்கள் மன்றம் ஒருபோதும் இடம் தராது என்பதை ஒட்டுக் காங்கிரசுத் தலைவர் உணரவேண்டும்; தவறினால், நாம் உணர வைப்போம்!

சொந்த விருப்பு வெறுப்பை வைத்துக்கொண்டு கழகத்தை வியாபாரக் கடையாக மாற்றத் திட்டம் போட்டால், கழகத் தோழர்கள் அப்படி ஒன்றும் இளித்தவாயர்கள் அல்லர்! கழக வரலாற்றை அவர் ஒருமுறை திரும்பிப் பார்க்கட்டும் -- உண்மை புரியும்!

கட்சியின் கணக்கைக் கட்சிக் கூட்டத்தில் கேட்பது முறை -- நியாயம் -- கழக விதியும் அதுதான்; அதைவிட்டுவிட்டு, மேடையில் ஏறி, 'நான்தான் அ[illegible] -- நான்தான் கழகம் -- நானில்லை என்றால் ஒன்றுமே இல்லை; அப்படியிருக்க, கணக்குக் கேட்டால் கதவைச் சாத்துகிறார்கள்' என்றால் தலைமைக் கழகப் பொருளாளர் பொறுப்பிற்கு தகுதி வாய்ந்த நபர்தானா அவர்?

சொத்துக் கணக்குக் கேட்ட சூரப்புலியே -- கணக்குத் தருகிறேன் கேள்; எனக்கென்று சொந்த வீடு இல்லை; இருப்பதும் உறவினர் வீட்டில்; தொழில் செய்வதோ வாடகைக் கட்டடத்தில்; எனது தந்தையும் நானும் தொழில் செய்யத் தலைப்பட்டு இன்றைய தேதி வரையில் சுமார் ஐம்பதனாயிரம் ரூபாய்க்குக் கடன்பட்டிருக்கிறோம்; வாங்கிய கடனுக்கு வட்டிகூடக் கட்ட முடியாமல் தவியாய்த் தவிக்கிறோம்; பிரிந்த கூரையை மாற்றிப் புதிய கூரை போடுவதற்குக்கூட யோசனை செய்ய வேண்டியுள்ளது; இதில் ஏதேனும் சந்தேகமிருந்தால் சோதனைக்கு உட்படத் தயாராக இருக்கிறேன்.

நீர் என்னதான் உண்மையை மறைக்க எண்ணினாலும், நீர் போட்ட வேடத்தைக் கலைக்க எங்களுக்கும் செய்ய வேண்டுமென்பது தெரியும்.

நீர் செய்ததவற்றுக்கு உங்களை மக்கள் மத்தியில் வைக்தே மன்னிப்புக் கேட்காமல் விடப்போவதில்லை!

எம். எஸ். அப்துல் மஜீத்
நகர தி.மு.க. செயலாளர்,
புதுக்கோட்டை.

நிழல் தந்த மரத்தையே வெட்டுகிறார்

ஐயா,

கடந்தகால கழகப் பொருளாளர் எம்.ஜி.ஆர். கழகத்தால் வளர்ந்து -- சிறந்து, தனக்கு நிழல் தந்த மரத்தையே வெட்டுகின்ற முறையில் கழகத்துக்குப் புறம்பான வகையில் செயல்பட்டு--சனநாயக விரோதிகட்கு ஊக்கமளிக்கும் வகையிலும், சமூக விரோத வன்முறைக் கும்பல்களை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழ் இனத்துக்கே துரோகம் இழைக்கும் வகையிலும் செயல்பட்டு வருகிறார்.

இதைக் கண்டிக்கும் வகையில் கழகத் தலைமை எடுத்த சரியான முடிவுக்கு உண்மையான கழகத் தொண்டர்கள் -- ஒரு விருடியாவது அண்ணாவின் நேரடி அன்பைப் பெற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள்.

எனவே, இந்தப் புரட்டு நடிகர் பெயரில் இயங்கிவந்த சிதம்பரம் தேரடிக் கடைத் தெரு எம் ஜி ஆர். மன்றத்தின் எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் நாங்கள் விலகிவிட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், இந்த அமைப்பாளர் 9 பேரில் 7 பேர் விலகி விட்டால் சனநாயக முறைப்படி மேற்படி அமைப்பு கலைக்கப் பட்டுவிட்டது என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் பொதுமக்கள், இந்த அரசியல் சோரம் போனவர் விஷயத்தில் சற்று விழிப்பாக இருக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இராம. முத்துக்குமரன், துணைச் செயலாளர்
சு. கோவிந்தராசன், செயற்குழு உறுப்பினர்
ந. இராமலிங்கம், செயற்குழு உறுப்பினர்
இரா. கங்கையன், செயற்குழு உறுப்பினர்
சி சீனிவாசன், பொருளாளர்
இரெ. கிருட்டினமூர்த்தி, பொருளாளர்
ஜி. தட்சிணாமூர்த்தி, உறுப்பினர்.

அரசியல் போர்வையில் சுயநலவாதி

அன்புள்ள ஐயா,

தற்போது தமிழகத்தில், 'அரசியல்வாதி' என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு தன்னுடைய சுயநலத்திற்காகக் -- கழக அரசின்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு ஊறு தேடவும், ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கவும் முனைந்து, அராஜகத்தைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார் கொடை

இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம்

ஹாசன், நவ. 10—

இலங்கையிலிருந்து வெளியேறி வரும் சுமார் 600 அகதிக் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் ஏற்பாடாகக் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில ஆந்திர அரசு, 3 000 ஏக்கரில் காபித் தோட்டம் பயிரிடத் திட்டமிட்டிருக்கிறது.

திருவள்ளுவர் கலைக்கோவில்

ரூ. 10 இலட்சம் செலவில் உருவாகும்

திருப்பணிக் குழு ஆலோசனைக் கூட்ட முடிவுகள் விவரம்

சென்னை, நவ. 10—

சென்னை—மைலாப்பூரிலுள்ள பழமைமிக்க திருவள்ளுவர் கோவிலை ரூ 10 இலட்சம் செலவில் விரிவுபடுத்தி – திருவள்[illegible]ர் கலைக் கோவிலாக மாற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்தக் கோவிலின் திருப்பணி வேலைகள் இன்னும் ஒரு வாரத்தில் தொடங்கும்.

திருவள்ளுவர் கலைக் கோவிலின் திருப்பணிக் குழுவின் ஆலோசனைக் கூட்டம், சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள தமிழ்நாடு தெய்வீகப்பேரவை கட்டிடத்தில் நேற்று நடந்தது.

கூட்டத்திற்குத் தெய்வீகப் பேரவைத் தலைவர் குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி. தலைமை தாங்கினார்.

அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன், குழுச் செயலாளர் பொள்ளாச்சி என். மகாலிங்கம், தெய்வீகப் பேரவைச் செயலாளர் ஏ. நாராயணசாமி, குழு உறுப்பினர்கள் என். டி. சுந்தரவடிவேலு (சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) -- ஈசுவர அய்யர் -- ஏ சி. துளசிங்கம் எம்.சி. அறங்காவலர்கள் சுந்தரம் -- சந்திரசேகரன் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன :—

திருவள்ளுவர் கோவிலை ரூ. 10 இலட்சம் செலவில் விரிவுபடுத்தி -- திருவள்ளுவர் கலைஅரங்கம் அமைத்துக் கலைக் கோவிலாக மாற்றுதல்.

கோவிலுக்கு எதிர்ப்புறம் உள்ள வீடுகளையும் - குடிசைகளையும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் -- குடிசை மாற்று வாரியமும் ஏற்றுக்கொண்டு, வீட்டுச் சொந்தக்காரர்களுக்குப் புதிய வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

கோவிலின் நுழைவாயில் பீடத்தின் மீது மாலை போடுவது போன்று இரண்டு கல் யானைகள் செய்து உலக உருண்டை அமைத்தல்.

முத்தமிழில் ஒன்றான இயலுக்கு ஒரு சிலை அமைத்தல்.

சென்னை--இராயப்பேட்டை நெடுஞ்சாலையிலுள்ள திருவள்ளுவர் சிலையிலிருந்து திருவள்ளுவர் கோவிலுக்கு அகலமான புதுப் பாதை ஒன்று போடுதல்.

திருவள்ளுவர் கலைக் கோவிலை மற்றிய மறற விவரங்கள் வருமாறு:—

இந்தக் கலைக் கோவில $1\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தில் விரிவுபடுத்திக் கட்டப்படவிருக்கிறது; கோவில் திருப்பணி வேலை இன்னும் ஒரு வாரத்தில் தொடங்கும்; 2 ஆண்டுகளுக்குள் கட்டட வேலை முடிந்து விடும்.

கோவிலுக்குள் அமைக்கப்படும் திருவள்ளுவர் கலைஅரங்கத்தில் 1,330 குறள்களும் சலவைக் கற்களில் எழுதப்படும். ஒவ்வொரு குறளின் கருத்துக்கு ஏற்ப அங்கு ஓவியங்களும் தீட்டப்படும்.

வெண்கலத்தினாலான 8 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை ஒன்று -- 3 அடி உயரமுள்ள மேடையில் அமைக்கப்படும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க அளவில் இந்தக் கலைக் கோவில் கவர்ச்சிகரமாக அமைக்கப்படுகிறது. திருவள்ளுவரின் நினைவாலயமாக இந்தக் கோவில் இருக்கும்.

சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த திருக்குறள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் இந்தக் கோவிலில் கட்டப்படும்.

திருக்குறள் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஒன்றும் ஒன்றும் கோவிலில் அமைக்கப்படும்.

கோவில் திருப்பணி செலவுக்கு பொதுமக்களிடமிருந்து நன்கொடை திரட்டப்படும்.

மைலாப்பூரில் தற்போது இருக்கும் திருவள்ளுவர் கோவிலையும் -- அந்தக் கோவில் விரிவுபடுத்தப்படும் இடத்தையும் நேற்று அமைச்சர் மு. கண்ணப்பன் பார்வையிட்டார்.

திருவாதவூர் தி. மு. க.

பொய்ச் செய்திக்கு மறுப்பு

திருவாதவூர் தி. மு. க. செயலாளர் என். இலட்சுமணன் அறிவிப்பதாவது :—

"3—11—72-ல் வெளியான 'தினமணி' இதழில், திருவாதவூர் தி. மு. க.-வினர் கழகத்தைக் கலைத்துவிட்டுப் புதுக் கட்சி அமைத்தனர் என்று வெளிவந்த செய்தி அப்பட்டமான பொய் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்."

'அண்டர் கிரவுண்டு' வித்தைக்காரரும்

திடீர் அரசியல் தலைவரும்

"'ஒன்பதாம் தேதி சென்னையில் சர்வ கட்சிக் கூட்டம் நடைபெறும்; அன்று எம். ஜி. ஆர். தனது எதிர்காலத் திட்டத்தை அறிவிப்பார்' என்று கம்யூனிஸ்டு கல்யாணசுந்தரம் தெரிவித்தார்."

—பத்திரிகைச் செய்தி: 8—11—72

ஒன்பதாம் தேதியும் வந்துபோய்விட்டது; சென்னையில் சர்வ கட்சிக் கூட்டம் நடந்ததாகவோ அதில் எம். ஜி. ஆர். தனது எதிர்காலத் திட்டத்தை அறிவித்ததாகவே செய்தி இல்லை! இராயபுரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் எம். ஜி. ஆரும் – கல்யாணசுந்தரமும் பே[illegible]டும் ஒரு செய்தி வெளியாகியுள்ளது; அது[illegible] சர்வ கட்சிக் கூட்டமல்ல!

அந்தக் கூட்டத்திலாவது எம்.ஜி.ஆர். தனது எதிர்காலத் திட்டத்தை வெளியிட்டாரா என்று விசாரித்ததில் அதுவும் நடக்கவில்லை என்றே தெரிகிறது!

அர்த்தால் நடத்தப்போவதாக ஏற்கனவே கூறிக்கொண்டிருந்த பழைய செய்தியைத்தான் அறிவித்தாராம்!

"எல்லோரும் கொஞ்சம் ஜோரா கைதட்டுங்கோ – இதோ இந்த மாங்கொட்டை முளைத்துச் செடியாகி மரமாகிக் காய்த்துப் பழுக்கப் போகிறது; அந்தப் பழத்தை அரிந்து எல்லோருக்கும் கொடுக்கப் போகிறேன்; அதைச் சாப்பிட்டுவிட்டுத்தான் நீங்களெல்லாம் இந்த இடத்தைவிட்டுப் போகவேண்டும்" என்று முச்சந்தியில் வேடிக்கை காட்டுபவன் சொல்வானே – அதற்கும், கல்யாணசுந்தரம் கூற்றுக்கும் என்ன வித்தியாசம்? முச்சந்தி வித்தைக்காரனைப்போல் 'அண்டர் கிரவுண்டு' கல்யாணசுந்தரம், முச்சந்திக்கு முச்சந்தி வேடிக்கை காட்ட ஆரம்பித்திருக்கிறார்; அதற்கு எம்.ஜி.ஆர். தோதாகக் கிடைத்திருக்கிறார்.

நடக்கட்டும் பிழைப்பு கொஞ்ச நாளைக்கு!

தமிழ்நாடு பரிசுச் சீட்டுக் குலுக்கல் முடிவுகள்

10-11-1972 அன்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற 49-வது குலுக்கல் முடிவுகள் விவரமும் – பரிசுகள் பெற்ற எண்களும் :—

'ஜே. கியூ.' வரிசை

ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000
548483

முதல் பரிசு பெற்ற எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண்களுக்கு இரண்டு ஆறுதல் பரிசுகள் -- தலா ரூ. 1,500 வீதம்
548482 548484

2 இரண்டாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10,000 வீதம்
362989 810331

இரண்டாவது பரிசு பெற்ற எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண்களுக்கு நான்கு ஆறுதல் பரிசுகள் -- தலா ரூ. 500 வீதம்
362988 362990
810330 810332

75 மூன்றாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ 1 000 வீதம்

028849	033109	048514	051319
062464	066190	088409	119261
124131	125195	135189	151594
155244	207462	220067	221051
221376	221663	227216	241044
247826	253688	265892	271164
304254	307131	331099	358976
361440	369686	371320	371585
416962	486781	524215	535778
545188	552812	577062	581300
583366	588530	598111	628960
647131	653295	659759	662183
662381	673677	699466	703456
740869	742234	744358	753198
754358	757208	762316	778217
805312	809009	830631	830912
835164	840087	845836	852268
856115	865871	925920	930055
944621	949024	969463	

100 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 500 வீதம்
000000-லிருந்து 999999 வரையிலான எல்லா டிக்கெட்டுகளிலும் கீழ்க்கண்ட ஐந்து எண்களில் முடியும் எல்லா டிக்கெட்டுகளுக்கும் :—
02292 25019 37041 38331 40177
42143 64319 79531 80367 96122

500 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 வீதம்
000000-லிருந்து 999999 வரையிலான எல்லா டிக்கெட்டுகளிலும் கீழ்க்கண்ட நான்கு எண்களில் முடியும் எல்லா டிக்கெட்டுகளுக்கும் :—
6943 9308 9483 9189 9806

1,000 ஆறாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 50 வீதம்
000000-லிருந்து 999999 வரையிலான எல்லா டிக்கெட்டுகளிலும் கீழ்க்கண்ட மூன்று எண்களில் முடியும் எல்லா டிக்கெட்டுகளுக்கும் :—
126

'ஜே. ஆர்.' வரிசை

முதல் பரிசு: ரூ. 1,00,000
512281

முதல் பரிசு பெற்ற எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண்களுக்கு இரண்டு ஆறுதல் பரிசுகள் -- தலா ரூ. 1 500 வீதம்
512280 512282

2 இரண்டாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ 10,000 வீதம்
091239 123203

இரண்டாவது பரிசு பெற்ற எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண்களுக்கு நான்கு ஆறுதல் பரிசுகள் --- தலா ரூ. 500 வீதம்
091238 091240
123202 123204

75 மூன்றாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ 1,000 வீதம்

044908	055306	061749	083731
119772	142438	147514	153359
159341	162611	164930	180278
185768	194313	208468	212001
212559	230489	235720	254867
268605	283928	289781	290933
318845	351664	363366	364781
376410	411077	443379	447516
449704	462757	477993	494400
508882	512530	538003	542078
548093	603424	603979	615223
618571	630330	634318	637074
637075	642748	649872	650509
676194	686099	695398	755328
777949	800245	809058	821271
827239	838040	840578	843873
848291	869730	869915	921153
934529	949980	960289	987264
987623	990243	994304	

100 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 500 வீதம்
000000 லிருந்து 999999-வரையிலான எல்லா டிக்கெட்டுகளிலும் கீழ்க்கண்ட ஐந்து எண்களில் முடியும் எல்லா டிக்கெட்டுகளுக்கும் :—
01699 06167 07920 20049 42331
47051 55950 65311 66510 98072

500 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 வீதம்
000000-லிருந்து 999999-வரையிலான எல்லா டிக்கெட்டுகளிலும் கீழ்க்கண்ட நான்கு எண்களில் முடியும் எல்லா டிக்கெட்டுகளுக்கும் :—
0222 0469 7169 8441 9532

1000 ஆறாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 50 வீதம்
000000-லிருந்து 999999-வரையிலான எல்லா டிக்கெட்டுகளிலும் கீழ்க்கண்ட மூன்று எண்களில் முடியும் எல்லா டிக்கெட்டுகளுக்கும் :—
092

'ஜே. எஸ்.' வரிசை

ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000
910285

முதல் பரிசு பெற்ற எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண்களுக்கு இரண்டு ஆறுதல் பரிசுகள் -- தலா ரூ. 1,500 வீதம்
910284 910286

2 இரண்டாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10 000 வீதம்
272266 995011

இரண்டாவது பரிசு பெற்ற எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண்களுக்கு நான்கு ஆறுதல் பரிசுகள் --- தலா ரூ 500 வீதம்
272265 272267
995010 995012

75 மூன்றாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 வீதம்

001647	002303	017375	019952
028510	031349	040784	058364
067098	082562	099450	140022
152274	198626	200490	209589
210723	219459	234247	239470
242229	244960	267210	267304
300648	305107	320601	323865
358968	369449	400449	426891
438872	442230	447321	446012
464047	503352	504460	505658
517435	523057	535251	541028
545395	545613	550707	558959
578681	614269	624518	638020
667820	705098	709704	746721
750695	753994	777045	778372
779121	779994	787945	825754
828154	839181	845051	861109
896202	898858	912434	919062
921440	959982	961909	

100 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 500 வீதம்
000000-லிருந்து 999999 வரையிலான எல்லா டிக்கெட்டுகளிலும் கீழ்க்கண்ட ஐந்து எண்களில் முடியும் எல்லா டிக்கெட்டுகளுக்கும் :—
21954 30217 35742 41430 44810
60828 60890 62038 93341 94802

500 ஐந்தாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 100 வீதம்
000000 லிருந்து 999999 வரையிலான எல்லா டிக்கெட்டுகளிலும் கீழ்க்கண்ட நான்கு எண்களில் முடியும் எல்லா டிக்கெட்டுகளுக்கும் :—
1840 4391 4963 6344 8707

1,000 ஆறாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 50 வீதம்
000000-லிருந்து 999999 வரையிலான எல்லா டிக்கெட்டுகளிலும் கீழ்க்கண்ட மூன்று எண்களில் முடியும் எல்லா டிக்கெட்டுகளுக்கும் :—
012

முதல் பரிசு, இரண்டாவது பரிசு பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெற சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழகப் பரிசுச் சீட்டுத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலும், 3-வது பரிசு முதல் 6-வது பரிசு வரையிலும் மற்றும் ஆறுதல் பரிசு பெற்ற சீட்டுக்களையும் வைத்திருப்பவர்கள் பரிசுத் தொகையைப் பெறத் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு துணைக் கருவூலத்திலும் அதற்குரிய படிவங்களை நிரப்பிக் கொடுத்துப் பரிசுகளைப் பெறலாம்.

எழுதித் தரவேண்டிய படிவங்கள் பரிசுகள் பெறவேண்டிய அலுவலகங்களில் கிடைக்கும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது ரிசர்வ் பாங்கு அட்டவணையில் உள்ள வங்கிகள் மூலமாகவோ கொடுக்கலாம்.

பரிசு பெற்ற எண்கள் அடங்கிய விவரப் பட்டியல் தமிழக அரசிதழ்களிலும் அச்சிடப்படுகின்றன; மேற்படி பட்டியல் வேண்டுவோர், அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி. 'விற்பனை அதிகாரி, அரசு வெளியீட்டு நிலையம், 166, அண்ணா சாலை, சென்னை-2' என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரிசுச் சீட்டு பற்றி விவரங்கள் தேவைப்பட்டால், 'இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2' என்ற முகவரிக்கு எழுத வேண்டும்.

விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளக் கடைசித் தேதி: 7-12-1972

50-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல்

50-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல் 1972 டிசம்பர் மாதம் 11-ந் தேதி நடைபெறும்.

மொத்தப் பரிசுகள்: 3,368 -- மொத்தப் பரிசுத் தொகை: 7,00,000

அடுத்த குலுக்கல்: 11-12-72; அடுத்த குலுக்கலுக்கு வரிசைகள்: 2 (இரண்டு) – 'ஜேடீ', 'ஜேயு'

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

இதுவரை 298 இலட்சாதிபதிகளைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது!

பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய், விற்பனை அடிப்படையில் மாவட்டங்களுக்குத் திருப்பித் தரப்படுகிறது. கல்விக்கூடங்கள் கட்ட—நோய் தீர்க்கும் மருந்தகங்கள் அமைக்க இப்பணம் செலவிடப்படுகின்றது.

நாடு நலம் பெற — உங்கள் நல்வாய்ப்பினைச் சோதிக்க — வாங்கிடுவீர் தமிழகப் பரிசுச் சீட்டு!

ஒரு சீட்டின் விலை ரூ. 1-தான்

தே. அரங்கநாதன்
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

புலவர்கள் பெற்ற பாராட்டு

கவிஞர் தணிகை உலகநாதர் கௌரவ நீதிபதியாக நியமிக்கப்பட்டிருப்பதையும், புலவர் மி. ச. நடேசனார் திருத்தணிகை அறங்காவலர் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதையும் பாராட்டும் வகையில் 9—10—72 அன்று புலவர் கோ. வில்வபதி தலைமையில் கோகலே மண்டபத்தில் பாராட்டு விழா கொண்டாடப்பட்டது.

பாராட்டுக்குரிய புலவர்களுக்குச் சிறப்புச் செய்யப்பட்டது.

புலவர் ஐ. சுப்பிரமணியம், டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், புலவர் முத்துக்குமாரசாமி, வல்லை பாலசுப்பிரமணியம், பேராசிரியர் சிவ. சிவராமலிங்கம் புலவர்கள் அழகுவேலனார், நஞ்சப்பன், திருஞானசம்பந்தம், மயிலை. சிவ. சண்முகசுந்தரம், திருமதி கலைச்செல்வி ஆகியோர் பாராட்டுப் பேருரையாற்றினர்.

கவிஞர் தணிகை உலகநாதர், புலவர் மி. ச. நடேசனார் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினர்.

புலவர் ப. கி. பொன்னுசாமி விழாக்குழுவின் சார்பில் நன்றி நவின்றார்.

ஆச்சரியத்துக்குரிய கதாநாயகர்கள்!

'ஒரே மேடையில் எம். ஜி. ஆர். -- கல்யாணசுந்தரம்!'

சில பத்திரிகைகளில் இப்படி ஒரு தலைப்புடன் செய்தி! இதில் என்ன ஆச்சரியத்தைக் கண்டார்களோ அந்தப் பத்திரிகை ஆசிரியர்கள்!

ஏதோ கூடாதவர்கள் கூடுவதாகவோ -- சேரவே முடியாதவர்கள் சேரப் போவதாகவே இருந்தால் இப்படிச் செய்தி போடுவதில் பொருளும் உண்டு -- பொருத்தமும் இருக்கும்.

புதுக் கட்சித் தலைவரும் வலது கம்யூனிஸ்டுத் தலைவரும் சென்னை இராயபுரத்தில் ஒரு கூட்டத்தில் பேசவிருந்த செ[illegible]தியைத் தான் இப்படி அந்தப் பத்திரிகைகள் போட்டிருக்கின்றன!

அந்தக் கூட்டமும் நடந்தது; குறிப்பிட்ட அவர்கள் இருவரும் ஒரே மேடையில் பேசினார்கள்; பத்திரிகைகள் எதிர்பார்த்தபடி எந்தவித ஆச்சரியமும் நிகழவில்லை!

கல்யாணசுந்தரமும் -- எம். ஜி. இராமச்சந்திரனும் என்ன -- இரு துருவங்களா?' -- அவர்கள்தானே இன்றைய அரசியலின் கதாநாயகர்கள்!

பத்திரிகைகளுக்கு 'எட்டும் பத்திச் செய்தி' -- அவர்கள் புண்ணியத்திலேதானே இப்பொழுதெல்லாம் கிடைத்துக் கொண்டிருக்கிறது!

ஈருடல் ஓருயிராக மாறிவிட்ட அவ[illegible]ளைச் சந்திக்க வைப்பதா ஆச்சரியத்துக்குரிய செய்தி?

'அண்ணா - காந்தியைவிட நான் பெரியவன்'

★

'வேண்டுமானால் கைதுசெய்து பாருங்கள்' என்கிறார் புரட்சியார்!

"என்னைக் கைது செய்தால் இந்த ஆட்சி மூன்று நாள் அல்ல-- ஒரு நாள்கூட இராது என்று எம். ஜி. இராமச்சந்திரன் வண்ணாரப்பேட்டையில் நடந்த பொதுக்கூட்டத்தில் அறிவித்தார்."

—செய்தி

அடடே! அப்படிச் சொல்லுமய்யா -- வாத்தியாரே! இப்பொழுதுதான் உமது சுயரூபம் தெரிகிறது!

'பேரறிஞர் அண்ணாவைவிட, நான் பெரியவன்' என்ற உமது நினைப்பை மெல்ல மெல்ல இப்போதுதான் வெளிக்காட்ட ஆரம்பித்திருக்கிறீர்!

என்றைக்கு இருந்தாலும் ஒருநாள் இதை வெளிப்படுத்தித்தானே தீர வேண்டும்?

இலட்சோபலட்சம் மக்களின் இதயத்தில் குடியிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களையே ஒருமுறையல்ல -- எட்டுமுறை கைது செய்து சிறையில் வைத்து--வழக்குத் தொடுத்து--தண்டனையும் கொடுத்திருக்கிறது முன்பிருந்த ஆட்சி; அப்போதுகூட, அந்த அடக்குமுறை ஆட்சி ஒழிந்துவிடவில்லை! சனநாயக முறையில் படிப்படியாகப் போராடித்தான் -- தேர்தல் மூலம் தான் அந்த ஆட்சியை அகற்ற முடிந்தது! 'ஓட்டு முறை மூலம்தான் எந்த ஆட்சியையும் அகற்ற வேண்டும் -- வேட்டு முறையில் கூடாது' என்பதுதான் அண்ணாவின் உறுதியான கொள்கை -- கண்டிப்பான கட்டளை;

அண்ணா அவர்கள் தாம் கைது செய்யப்படுவதற்கு முன்னரோ-- கைது செய்யப்பட்ட பிறகே கூட இப்படிப்பட்ட ஓர் அறிவிப்பை நாட்டு மக்களுக்குத் தந்ததில்லை!

"நான் கைது செய்யப்பட்டால் கழகத் தோழர்கள் அமைதியுடன் இருக்க வேண்டும்; கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு காக்கவேண்டும் என்றுதான் அண்ணா கேட்டுக்கொண்டார்.

"நான் கைது செய்யப்பட்டால்- நாடே கொந்தளிக்கும் -- ஆட்சி ஒரு நாள்கூட நிலைக்காது -- எனக்காகத் தீக்குளிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்!" என்றெல்லாம் அவர் சொல்லவில்லை!

மகாத்மா காந்திகூட எத்தனையோ முறை கைது செய்யப்பட்டிருக்கிறார் -- சிறையில் கொடுமைக்கு உள்ளாகியிருக்கிறார்!

நாற்பது கோடி மக்களின் இதயத்தில் இடம் பெற்ற அந்த மகான் கைது செய்யப்பட்டபோதுகூட, அன்றைய கொடுங்கோல் ஆட்சி அழிந்துபடவில்லை! 'நான் கைது செய்யப்பட்டால் ஒரு நாள்கூட ஆட்சி நிலைக்காது' என்று அவர் சொல்லவில்லை!

அண்ணா அவர்கள் மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியால் உயிர்விட்டவர்கள் -- நஞ்சருந்தி உயிர் விட்டவர்கள் எத்தனை பேர்!

அப்படி அண்ணாமீது உயிரையே வைத்திருந்தவர்கள் நாட்டில் இருந்தும்கூட, அண்ணா கைது செய்யப்பட்டபோது தீக்குளிக்கப்போவதாக யாரும் அண்ணாவுக்குக் கடிதம் எழுதவில்லை!

பேரறிஞர் அண்ணாவைவிட -- மகாத்மா காந்தியைவிடத் தாம் பெரியவர் -- மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றவர் என்று காட்டிக்கொள்ள முயலும் மக்கள் திலகமே -- உமது கூற்றைக் கேட்டுச் சிரிப்புத்தான் வருகிறது! உமது அரசியல் கோமாளித்தனத்தைக் கண்டு அனுதாபம்தான் பிறக்கிறது!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அமைச்சர் என். வி. என். மணிவிழா

தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளரும் – தொழிலாளர் நலத் துறை அமைச்சருமான என். வி. நடராசன் அவர்களின் மணிவிழா

12--11--72 ஞாயிறு மாலை 6-மணிக்கு

சென்னை -- அண்ணாசாலை தி. மு. க. அறக்கட்டளை அண்ணா அறிவாலயத்தில்

(ஆபட்சுபரி அருகில்) நடைபெறும்

விழாத் தலைவர்:
தந்தை பெரியார்

மணிவிழாக் கேடயம் வழங்குபவர்:
முதல்வர் கலைஞர்

பொன்னாடை போர்த்துபவர்:
அமைச்சர் நாவலர்

மலர் வெளியிடுபவர்:
அமைச்சர் க. அன்பழகன்

வாழ்த்து இதழ் வழங்குபவர்:
அமைச்சர் சத்தியவாணிமுத்து

நன்றியுரை:
மதுரை மேயர் எஸ். முத்து

வாழ்த்துரை வழங்குவோர்:
தவத்திரு
குன்றக்குடி அடிகளார்
சிலம்புச் செல்வர் ம. பொ. சி.
அப்துல் வகாப் எம். எல். சி.
ஏ. ஆர். பெருமாள எம். எல். சி.
கவிஞர் கண்ணதாசன்
எஸ். எஸ் இராம[illegible]சாமி படையாச்சி
மற்றும் அமைச்ச[illegible]கள், மாவட்டச் செயலாளர்கள், [illegible]நாடாளுமன்ற -- சட்டமன்ற உறு[illegible]பினர்கள், கழக முன்னணியினர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் கடனுதவி

புதுடில்லி, நவ. 10—
இந்தியாவுக்கு இரண்டு கடன் உதவிகளை பிரிட்டன் அறிவித்தது; மொத்தக் கடனுதவி ரூ. 78 கோடி (4.1 கோடி பவுன்); இது திட்டப் பிணைப்பில்லாத திட்டங்கள் -- திட்டப் பிணைப்புள்ள திட்டங்கள் இரண்டுக்கும் ஆகும்.

இவ்வாண்டுத் தொடக்கத்தில் இந்தியா உதவிக் குழுக் கூட்டத்தில், 1972—73-ல் ரூ. 119.498 கோடி (6.3 கோடி பவுன்) அளவுக்கு நிதி ஒதுக்கப்படுமென்று பிரிட்டன் வாக்களித்திருந்தது; இதில் பெரும் பகுதியை இரு கடன் உதவிகள் மூலம் உறுதியான பொறுப்பாக்கிவிட்டது.

மேற்கொண்டு கடனுதவிகளைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது; அதுவும் விரைவில் இறுதி செய்யப்படும்.

அந்நிய நாடுகளின் உதவி ரூ. 277.26 கோடி

புதுடில்லி, நவ. 11—
1972 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாதத்தில் இந்தியாவுக்கு அந்நிய நாடுகளின் உதவி ரூ. 227.26 கோடி ஆகும் (31,175 கோடி டாலர்).

இதில் திட்டப் பிணை உதவி ரூ. 105.70 கோடி (14.5 கோடி டாலர்).

திட்டப் பிணைப்பில்லா உதவி ரூ. 121.56 கோடி (16,680 கோடி டாலர்).

திட்ட உதவி ஒப்பந்தங்கள் வருமாறு:—பிரான்சு 1.885 கோடி; அமெரிக்க ஏற்றுமதி -- இறக்குமதி பாங்கு 2,195 கோடி டாலர், உலக அபிவிருத்தி சங்கம் 10.420 கோடி டாலர்.

திட்டப் பிணையிலா ஒப்பந்தங்கள்:—கனடா 4.690கோடி டாலர், பிரான்சு 1.815 கோடி டாலர்; டென்மார்க் 578 இலட்சம் டாலர்; நெதர்லாந்து 2.10 கோடி டாலர்; உலக அபிவிருத்திச் சங்கம் 7.50 கோடி டாலர்.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்
அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக
வெளியீடு: நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.

வரவு--செலவுக் கணக்குகள் தெரியாதவருக்கு உறுப்பினர்களின் கணக்கு மட்டும் தெரியுமாம்!

"தி. மு. கழகத்தில் 18 இலட்சம் உறுப்பினர்கள் என்கிறார்கள்; எனக்குத் தெரியாதா -- எத்தனை இலட்சம் என்று?"

—புரட்சித் தலைவர்

தி. மு. கழகத்தில் பொருளாளராக இருந்து -- பொதுக்குழு கூடுவதற்குச் சில நாட்கள் இருக்கும்வரை 'செக்'குகளிலெல்லாம் கையெழுத்துப் போட்டுக்கொண்டிருந்த உமக்குத் தலைமைக் கழகத்தின் கணக்கே தெரியாது என்று போடுகிறீர் குண்டு! ஆனால், உறுப்பினர் கணக்கு மட்டும் தெரியும் என்கிறீர்; என்ன ஐயா உமது பேச்சு? அந்தக் கணக்கு மட்டும் எப்படித் தெரிந்தது?

பேரறிஞர் அண்ணாவால் துவக்கப்பட்டு இருபத்து மூன்று ஆண்டுகளாகக் கட்டுக் கோப்புடன் வளர்க்கப்பட்டு ஆளுங் கட்சியாகியுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு 18 இலட்சம் உறுப்பினர்கள்கூட இருக்கமாட்டார்கள் என்றால், நேற்று முளைத்த உமது கட்சிக்கு இருபது இலட்சம் -- முப்பது இலட்சம் என்று பத்திரிகையில் கொடுக்கிறீர்களே -- அது எப்படி?

பத்திரிகைச் செய்தியை நம்பியே கட்சி நடத்தலாம் என்று நினைக்காதீர்!

இன்னும் எத்தனை நாளைக்கு உமது போயபல்ஸ் பிரசாரம் நிலைக்கும்?

தி. மு. க. உறுப்பினர் கணக்கு வேண்டுமானால், எந்த நேரத்திலும் 'அறிவக'த்துக்கு வந்து பார்க்கலாமே!

உமது கட்சியின் உறுப்பினர் பட்டியல் எங்கே -- அந்த உறுப்பினர் கட்டணம் எந்தப் பாங்கியில் செலுத்தப்பட்டிருக்கிறது-- நாளையே இதற்குப் பதில் சொல்லும் பார்க்கலாம்!

வடக்கத்தி மாநிலங்களுக்கு வழிகாட்டுவார்களா?

"கண்ணமங்கலத்தில் போலீசுத் துப்பாக்கிச் சூட்டால் இறந்த மாணவரின் தந்தையை மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்."

—செய்தி

அமைச்சரின் இரக்க உள்ளத்தைப் பாராட்டுகிறோம்; தமிழ்நாட்டில் எங்கு துப்பாக்கிச்சூடு நடந்து யார் இறந்தாலும், டில்லியிலிருந்து ஓடோடி வந்து அனுதாபம் தெரிவிக்கும் நல்லதொரு மரபைக் கடைபிடிக்கத் துவங்கியுள்ள அவர்களுக்கு நமது யோசனையையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்போது அசாமில் மொழிக் கலவரம் மூண்டு -- அங்கு துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று -- பலர் மாண்டிருக்கின்றனர்; அங்கும் சென்று, இறந்தவர் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறுவது நல்லது!

இதேபோல், மற்ற மாநிலங்களிலும் தடியடி -- துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்திருக்கின்றன; அங்கெல்லாம், அந்த மாநிலத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் சென்று தாக்குதலுக்கு ஆளான அல்லது இறந்தவர் குடும்பங்களுக்கு ஆறுதல் சொன்னதாகத் தெரியவில்லை! மோகன் குமாரமங்கலமோ -- சி. சுப்பிரமணியமோ அந்த மாநிலத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களுக்கு இந்த 'நல்ல மரபை'க் கடைபிடிக்கும்படிச் சொல்ல வேண்டும்; அல்லது தாங்களே அந்த மாநிலங்களுக்கெல்லாம் சென்று ஆறுதல் கூறி வழிகாட்ட வேண்டும்.

தமிழ்நாட்டில் கடந்த 20 ஆண்டுக் காங்கிரசு ஆட்சிக் காலத்தில் எத்தனையோ துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன; குண்டுக்குப் பலியாகி மாண்டவர்கள் தொகை கணக்கில் அடங்காது; அந்தக் குடும்பங்களுக்கெல்லாம் ஆறுதல் கூற எந்த மத்திய அமைச்சரும் அப்போது வந்ததில்லை!

குமாரமங்கலத்தின் பழைய கட்சியான கம்யூனிஸ்டுக் கட்சியினர் 22 பேரை சேலம் சிறைக்குள் நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளினார்களே காங்கிரசு ஆட்சியாளர்கள், அப்போதுகூடத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர் யாரும் இறந்தவர்கள் குடும்பங்களுக்கு ஆறுதல் கூற வரவில்லை என்பதை அவருக்கு நினைவூட்டுகிறோம்.

பம்பாய் தி. மு. க. மத்தியக் குழுக்கூட்டம்

பம்பாய் தி.மு.க. மத்தியக் குழுக் கூட்டம், 12—11—72 காலை 10-மணிக்கு தாராவி 'திராவிடரக'த்தில் நடைபெறும்; மத்தியக் குழுப் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் எஸ். தியாகராசன் கேட்டுக்கொள்கிறார்.

பேச்சாளர் முகவரி

வே. கோதண்டபாணி,
நிலவள வங்கி,
தெற்கு வீதி,
வேதாரணியம்

கழகத் தோழர் மறைவு

தஞ்சை நகரம் 31-வது வட்ட தி. மு. க. செயற் குழு உறுப்பினர் பொ. பக்கிரி மருத்துவமனையில் 28—10—72-ல் இயற்கையெய்தினார்; அன்னாருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் 30, 31-வது வட்டங்களில் கழகக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

29—10—72-ல் அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள் மறைந்த தோழரின் சடலத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்; மற்றும் தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் சு. நடராசன், ஒன்றியப் பெருந் தலைவர் இராசன், தஞ்சை நகர் மன்றத் தலைவர் செ. பெத்தன்னர் தி. பொ. கண்ணன், மு. வெள்ளைச்சாமி ஆகியோரும் இறுதி மரியாதை செலுத்தினர்.

சி. சாமி அன்னன் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது; து. கருப்பையன் எம்.சி., இரா. கலிவரதன், செ. செல்லத்துரை, கா. கலியபெருமான், வி. கருப்பையா, திரு. சுப்பையன், ஆசிரியர் முழந்தை ஆகியோர் இரங்கல் உரையாற்றினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.